விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 280 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 09 வியாழக்கிழமை (25.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## மன்னார் காற்றாலைத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்குக

### ஜனாதிபதி அநுர பணிப்பு

*(மன்னார்)*

மன்னாரில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட இரண்டு காற்றாலை மின்சார உற்பத்தித் திட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார். இந்த விடயம் குறித்து தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## அரசு நீதித்துறையில் கடுமையான தலையீடு

### சபையில் தயாசிறி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நீதித்துறையில் அரசாங்கம் கடுமையான தலையீடுகளை மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று 02ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில்

## கிணற்றில் வீழ்ந்த இளம் குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கிணற்றில் வீழ்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று 02ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி அநுரவின் முடிவுக்கு எதிராகப் போராட்டம் வெடிக்கும்

### மன்னார் பிரஜைகள் குழு




(மன்னார்)

மன்னாரில் காற்றாலை திட்டங்களைத் தொடர்வது ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவாக இருந்தாலும் எமது மண்ணையும் வளங்களையும், உரிமையை

15ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவை நேரில் சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர்

(தங்காலை)


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.



15ஆம் பக்கம் பார்க்க

## நெருக்கமான உறவை பேண எதிர்பார்ப்பு

### அமெரிக்க பிரதிநிதியிடம் அநுர



(வோஷிங்டன்)

அமெரிக்காவுடன் நெருக்கமான உறவைப் பேண எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 02ஆம் பக்கம் பார்க்க

## "ஏக்கிய ராஜ்ய" அரசியலமைப்பை நிறைவேற்ற அநுர அரசு முயற்சி

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

ஏக்கிய ராஜ்ய என்ற புதிய அரசியலமைப்பை உருவாக்க அநுர அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

இதனைத் தமிழர்கள் தோற்கடிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.கொக்குவில் பகுதியில் 02ஆம் பக்கம் பார்க்க



## கட்டுநாயக்கவில் கைதான இளைஞனிடம் தீவிர விசாரணை

### யாழில் கைக்குண்டு, வாள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதான நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வாள் ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா பயணமானார்

### அமைச்சர் ஹர்ஷன

(கொழும்பு)

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்து ஐக்கிய நாடுகள் குழுவால் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்படும் முதலாவது மதிப்பாய்வில் கலந்து கொள்

15ஆம் பக்கம் பார்க்க

### றீச்சாவில் தீ விபத்து

## 200க்கும் மேற்பட்ட தென்னைகள் எரிந்து நாசம்

(கிளிநொச்சி)

வடக்கின் பிரபல சுற்றுலாத் தலமான றீச்சா பண்ணையில் ஏற்பட்ட தீ விபத்தினால் 200க்கும் மேற்பட்ட தென்னைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்செயல் திட்டமிட்டு விசமிகளால் மேற்கொள்ளப்பட்டது எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. (ம-7)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு நீதித்...

உரையாற்றும் போதே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமக்கு ஏற்றவாறு நீதிபதி ஆயங்களை நியமித்து வழக்குகளை விசாரிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்புக்கமைய நீதிபதி அல்லது நீதியரசர் ஒருவரை வேறெந்த வேதனம் பெறும் பணிகளுக்கு அமர்த்த முடியாது.

நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை பாதுகாப்பதற்கு இத்தகைய விதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

எனினும் ஓய்வுபெற்ற நீதியரசர் அல்லது நீதிபதியொருவரை அரச பதவிகளுக்கு நியமிக்கும்போது, நீதித்துறைச் சேவையின் சுயாதீனத் தன்மை குறித்து கேள்விகள் எழுகின்றன.

முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் தற்போது, ஐக்கிய நாடுகளுக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அவரது நியமனக் கடிதம் குறித்து தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கேள்வி எழுப்பியபோது, அவ்வாறான எந்தக் கடிதமும் இல்லை என பதிலளிக்கப்பட்டது.

முன்னதாக சுயாதீனமாக இருந்த நீதிச் சேவை அதிகாரிகள் சங்கம், காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னர் இந்த அரசாங்கத்தின் அரசியல் கட்சியுடன் இணைந்தது.

தற்போது, இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் வடமத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பல நீதிபதிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

அவ்வாறே மிகவும் சிரேஷ்ட நீதவானாக இருந்த சதுரிக்கா டி சில்வா கல்கிசை நீதவானாக நியமிக்கப்பட்டு ஓராண்டு கூட பூர்த்தியாகாத நிலையில் இடமாற்றம் செய்யப்பட்டார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க உள்ளிட்டோரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்ட பின்னணியில் அவர் இடமாற்றம் செய்யப்பட்டார் என தயாசிறி குறிப்பிட்டார். (ம-7)

## நெருக்கமான...

தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான விசேட பிரதிநிதிக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வர்த்தக, வாணிப, சுற்றுலா மற்றும் முதலீடு உள்ளிட்ட இருநாடுகளுக்கும் முக்கியமான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு அந்தத் துறைகளை மேலும் முன்னேற்றுவது குறித்தும் ஆராயப்பட்டது.

முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு பலமான மக்கள் ஆணையுடனான புதிய அரசாங்கம் என்ற வகையில், பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்ட ஒரு வளமான பொருளாதார முன்னுரிமை அடிப்படையில் அமெரிக்காவுடன் ஒரு செயற்பாட்டுடனான மற்றும் மிக நெருக்கமான உறவைப் பேண எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் உட்பட, மக்களின் எதிர்காலத்திற்காகப் பொருளாதாரத்தின் நீண்டகால ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்குத் தேவையான மறுசீரமைப்பு உள்ளிட்ட அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். (ம-7)

## 'ஏக்கிய ராஜ்ய...

அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியப் பேரவையுடன் ஜனநாய தமிழ்த் தேசியக் கூட்டணி ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது. அந்த வகையில் ஏக்கிய ராஜ்யவை எதிர்க்க வேண்டும், 13ஐ பேசி மக்களை திசை திருப்ப வேண்டாம். ஏக்கிய ராஜ்யவுக்கு எதிராக வேலை செய்ய வேண்டும். சுவிஸ் ஆட்சி முறை தொடர்பான கல்விப் பட்டறை இடம்பெற்றது.

இதில் இலங்கையில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இங்கு சமஷ்டி தொடர்பான கல்விக் கருத்தரங்கு இடம்பெற்றது. புலம்பெயர் மக்கள் அமைப்புக்கள் கலந்து கொண்டன. ஐ.நா ஆசிய பசுபிக் பொறுப்பதிகாரி இலங்கையின் மனித உரிமை சார்ந்த பொறுப்பதிகாரி மற்றும் சாட்சியங்களைச் சேகரிக்கும் அதிகாரிகளையும் சந்திக்க முடிந்தது.

இதில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் அரசு தமக்குத் தான் மக்கள் வழங்கி இருப்பதாக அரசு தெரிவித்துள்ளதாக கருத்துக்கள் வெளிவந்தது. தமிழ் மக்களின் மாற்றம் என்ற வகையில் அதை வலியுறுத்தி வந்துள்ளார்கள். அது உண்மையல்ல பொய்.

தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்தே அந்தக் கருத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு 80 ஆயிரம் வாக்குகள் தான் கிடைத்தது. தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கிடைத்த வாக்கு அதிகம்.

ஏக்கிய ராஜ்ய அரசியல் அமைப்பை பாராளுமன்றிற்கு கொண்டு வந்து நிறைவேற்ற இருப்பதாக தெரிவித்தனர். அதில் திருத்தம் செய்து கொண்டு வரவுள்ளதாக மக்களுக்கும் சுவிஸ் அரசுக்கும் கூறியுள்ளனர். நாம் ஏற்கனவே இவ்வாறு நடக்கும் என்று கூறினோம். பிரதமர் ஹரிணி பாராளுமன்றிற்கு வெளியே புதிய அரசியலமைப்பை உருவாக்கலாம் என்ற நடவடிக்கை வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

அரசுக்கு 3/2 பெரும்பான்மை உள்ளதால் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்றும். சர்வஜன வாக்கெடுப்புக்கு விட்டு நிறைவேற்றப் பார்ப்பார்கள்.

இலங்கை தமிழரசுக் கட்சியுடன் இது தொடர்பில் பேச முனைந்து வருகிறோம். சுமந்திரன் இந்தப் பேச்சுக்களை முறித்துக் கொண்டார். பாராளுமன்றக் குழுவைத் தாண்டி கட்சியுடன் பேச நாம் முனைந்தோம். சி.வி.கே சிவஞானத்தை சந்தித்த போது அவர் ஏக்கிய ராஜ்யவை நாம் நிராகரித்துள்ளோம் என்றும் அறிவித்தார். இதன் பின்னர் சுமந்திரன் அவசர அவசரமாகச் செயலாளராக வந்தார். இந்தப் பேச்சுக்களை முறித்துக் கொண்டார்.

தமிழ்த் தேசிய தரப்பு ஒன்றுகூடி பெரும்பான்மையைக் காட்டி ஒரு அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். சுவிஸ் அரசின் சந்திப்பின் போது கலந்து கொண்ட சத்தியலிங்கத்திற்கும் தெரியும். தமிழரசுக் கட்சி கடிதம் ஒன்றை எழுதுகிறார்கள், தாம் தனியாக பேச்சு நடத்துவதற்கு காலம் தருமாறு கோரியிருந்தனர். சுமந்திரனின் நிகழ்ச்சி நிரலுக்கும் அரசின் நிகழ்சி நிரலுக்கும் வேறுபாடு கிடையாது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி 13 ஆவது திருத்தத்தை மீளமையப்படுத்தி முன்னுக்கு நின்று செயற்பட்டவர் சுரேஷ். அவருக்கும் ஏக்கிய ராஜ்ய நிறைவேற்றப்படப் போகிறது என்று தெரியும். இது கற்பனை அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## கிணற்றில்...

மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த புஸ்பராசா புவிதரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இராமநாதபுரம் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


1ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 20.09.1962
விண்ணில் 06.10.2024

அமரர் இரத்தினம் பிறேமராஜா
(டென்மார்க்)
திதி : புரட்டாதி மாதம் வளர்பிறை சதுர்த்தி

நாட்கள் பல கடந்து ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாத உங்கள் நினைவுகள் வருகையில்
நிலை குலைந்து போகின்றோம்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாக போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை,
(தபாற்கந்தோர் அருகாமை)
(1580)
என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்



5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் லயன்
P.K.பாலசிங்கம்
பாலஸங்கர்



மண்ணுலகில் மாந்தருடன் 1969.11.18
விண்ணுலகில் மாதவனுடன் 2020.09.20

திதி : சதுர்த்தி

ஓங்கி வளர்ந்த தேகம்
ஒளிபரப்பும் அரிய கண்கள்
தாங்கியே அனைவர்க்கும்
தயவுசெய்யும் திருக்கரங்கள்
பாங்கிலுயர் பண்புடையார்
பாசத்தின் வடிவுடையார்
ஏங்கியழ எமைவிடுத்து
ஆண்டு ஐந்து ஆனதுவே அப்பா!

குடும்பத்தினர்
(5509)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் காரியாலயத்திற்கு முன்பாக திருமலை விவசாயிகள் போராட்டம்

(கொழும்பு)

**திருகோணமலை - முத்துநகர் விவசாயிகள் தமக்கு நீதி வேண்டி பிரதமர் காரியாலயத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

குறித்த போராட்டமானது நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்துநகர் விளைநிலங்களை உடனடியாகத் திருப்பிக் கொடு, இந்தியக் கம்பனிகளின் நில மற்றும் வளச் சூறையாடலுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம், பொய்கள் வேண்டாம்,விவசாயிகளை இப்படியா நடத்துவது போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் முத்துநகர் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், போராட்டம் கடந்த 7 நாட்களாக திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)



# ஏற்றுமதி அதிகரிப்பு


(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதித் துறை தொடர்ந்து மீள்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியைக் காட்டியது.

அதன்படி, குறிப்பிட்ட காலப் பகுதியில் மொத்த வருவாய் 11.554.32 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது இது 6.61% வலுவான அதிகரிப்பை பிரதிபலிக்கிறது என்று ஏற்றுமதி வாரியம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2025 ஓகஸ்ட் மாதம் மாத்திரம் மொத்த வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டையும் உள்ளடக்கிய மொத்த ஏற்றுமதிகள் 1,607.58 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது.இது 2024 ஓகஸ்ட் மாதத்தை விட ஆண்டுக்கு ஆண்டு 2.57% வளர்ச்சியைப் பதிவு செய்தது. (நி)

# இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான நட்புறவையும் நெருக்கமான ஒத்துழைப்பையும் மீண்டும் உறுதிப்படுத்தும் நோக்கில், அமெரிக்காவின் நியூ யோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.


இந்தச் சந்திப்புக் குறித்து எக்ஸ் தளத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் குறிப்பிட்டுள்ளதாவது,

"அமெரிக்காவில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தேன், இதன் போது, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வலுவான நட்பு மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது எக்ஸ் தளத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை வெளிவிகார அமைச்சரைச் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது என குறிப்பிட்டுள்ளார். (நி)

# வோல்கர் டக்குடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார். நியூ யோர்க்கில் ஐக்கிய நாடுகள் செயலகத்தில் உள்ள மனித உரிமைகள்பேரவை அறையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பின் போது, மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் ஈடுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதியுடன், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (நி)

# மலையக வீதிகளில் பாதுகாப்பு வேலிகள்; ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு



(கொழும்பு)

பொது பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சகல சாரதிகளும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர், சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்றும் அதே போன்று விபத்துக்களை தடுக்கும் வகையில் பாடசாலை வாகனங்கள், அலுவலக வாகனங்கள், பயணிகள் போக்குவரத்து பேருந்துகளையும் பரிசோதனை செய்யுமாறு போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பிரிவு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாக மலையகப் பகுதிகளில் காணப்படும் வளைவுப் பாதைகளில், பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் காதர் மஸ்தான் எம்.பி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.(நி)

# இந்திய கடற்படைத் தளபதி பிரதமரை சந்தித்தார்



(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்திய கடற்படைத் தளபதி, கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தார்.

இந்திய கடற்படைத் தளபதி மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற இந்த உத்தியோகபூர்வ சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் நீண்டகால நட்புறவை வலுப்படுத்துதல் உள்ளிட்ட இரு தரப்பினருக்கும் முக்கியமான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், கடல் சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் உள்ளிட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் கூட்டு அணுகு முறையுடன் செயற்படுவதன் முக்கியத்துவமும் பற்றி வலியுறுத்தப்பட்டது.

மேலும், இந் நாட்டு கடற்படை அதிகாரிகளுக் கான பயிற்சி வாய்ப்புகளை இந்திய அரசாங்கத்தினால் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய மட்ட கபடிப் போட்டியில் கிளி.சிவநகர் அ.த.க பாடசாலை சம்பியன்




அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கபடிப் போட்டி யில் கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கபடி போட்டி அம்பாறை நிந்தவூர் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண் களுக்கான இறுதியாட்டத்தில் கிளி நொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து கொழும்புகல மத்திய கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் கிளி நொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியினர் தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 34:30 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (3-90)

## கால்பந்தின் உயரிய விருதை தட்டிச்சென்ற பிரான்ஸ் வீரர்



கால்பந்தின் உயரிய விருதுகளில் ஒன்றான பலோன் டி' ஆர் விருதை பிரான்ஸ் வீரர் உஸ்மான் டெம்பேலே வென்றார்.

பாரிஸ் செயின்ட்-ஜேர்மன் அணிக்காக விளையாடி வரும் 28 வயது பிரான்ஸ் வீரர் உஸ்மான் டெம்பேலே, கடந்த சீசனில் 35 கோல்கள் அடித்தார்.


இதன்மூலம் அவர் உயரிய விருதுகளில் ஒன்றான பலோன் டிஆர் விருதை முதல் முறையாக வென்றுள்ளார்.

டெம்பேலே பாரிஸ் செயின்ட்-ஜேர்மைன் முதல் முறையாக சம்பியன்ஸ் லீக் பட்டம் வெல்ல முக்கிய காரணமாக அமைந்தார்.

இந்த விருதினை அர்ஜென்டினாவின் கால்பந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி 8 முறை வென்றுள்ளார். இவர்தான் அதிகமுறை இவ் விருதை பெற்றவர் ஆவார்.

அத்துடன் போர்த்துக்கல் ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோ 5 முறை இந்த விருதை பெற்றுள்ளார். (3)

## ஜொலிஸ்ரார் கிண்ணத் தொடர் ஸ்கந்தாஸ்ரார் அணி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி



ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத் தொடர் பல வருடங்களின் பின்னர் இவ் வருடம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்கான 2 ஆவது தகுதிச் சுற்றுத் தொடரில் ஸ்கந்தாஸ்ரார் அணியை எதிர்த்து மானிப்பாய் பரீஸ் அணி மோதிக்கொண்டது.

இந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணியினர் 22.2 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றனர்.

அணிசார்பில் அதிகபட்சமாக தெய்வீகன் 28 ஓட்டங்களை பெற்றிருந்தார். பந்து வீச்சில் ஸ்கந்தாஸ்ரார் அணி சார்பில் அதிகபட்சமாக பிரசன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

91 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஸ்கந்தாஸ்ரார் அணி 10.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 91 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

அணி சார்பில் அதிகபட்சமாக பிரசன் 32 ஓட்டங்களையும், தர்மிலன் 19 ஓட்டங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## இலங்கைக்கெதிரான ஆசிய தொடரில் வெற்றியுடன் மீண்டது பாகிஸ்தான்



17 ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் டுபாய் மற்றும் அபுதாபியில் நடைபெற்று வருகிறது. இதில் சூப்பர்4 சுற்றுக்கு வந்துள்ள நடப்பு சம்பியன் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

இந்நிலையில், இந்த தொடரில் நேற்று முன்தினம் நடந்த சூப்பர் 4 சுற்று ஆட்டத்தில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்த ஆட்டத்திற்கான நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவரில் 8 விக்கெட்டை இழந்து 133 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இலங்கை தரப்பில் கமிந்து மெண்டிஸ் 50 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் ஷாகின் அப்ரிடி 3 விக்கெட் வீழ்த்தினார். தொடந்து 134 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் 18 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 138 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிவகுரு ஆதீனத்தில் ஆன்மீகவுரை

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் நவராத்திரியை முன்னிட்டு தினமும் மாலை 6 மணி முதல் 6.30 மணிவரை ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஆன்மீகவுரை நிகழ்த்தப்படுகின்றது.

அந்த வகையில் இன்று வியாழக்கிழமை "பதற்றம் வருவது ஏன்" எனும் தலைப்பிலும் நாளை வெள்ளிக்கிழமை "பணியப் பணிய பாவம் அகலும்" எனும் தலைப்பிலும் நாளை மறுதினம் சனிக்கிழமை "பொறுத்தார் பூமி ஆள்வார்" எனும் தலைப்பிலும் ஆன்மீக உரை இடம் பெறவுள்ளன. (8)



மாத்தறை கோட்டாவில உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தேசிய மட்ட தனிநபருக்கான டேக் வாண்டோ போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் வி.பவிகரன் 18 வயதின் கீழ்ப்பிரிவில் முதல் முறையாக வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

## நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களும் விடுதலை


(அராலி)

கடந்த ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 7 இராமேஸ்வரம் மீனவர்களையும் நிபந்தனையுடன் விடுதலை செய்ய யாழ். ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி நெடுந்தீவு அருகே கைது செய்யப்பட்ட 7 தமிழக மீனவர்களும் நேற்று யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே அவர்கள் அனைவரும் 6 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை என்ற நிபந்தனையுடன் 7 மீனவர்களையும் விடுவித்து ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

அத்துடன் கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி நெடுந்தீவு கடலில் மீன்பிடி உபகரணங்கள் ஏதும் இல்லாமல் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 4 மீனவர்களும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (8-104)

## 6 கோடியே 20 இலட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசிகள் கணினிகளுடன் மூவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் டெப் கணினிகளுடன் இரண்டு பெண்கள் உட்பட மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று புதன் கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 39 மற்றும் 62 வயதுடைய இரண்டு பெண்களும் 25 வயதுடைய இளைஞனும் ஆவர்.

சந்தேக நபர்கள் மூவரும் டுபாயில் இருந்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பின்னர் சந்தேக நபர்கள் மூவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தைவிட்டு வெளியேற முயன்ற போது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்கள் மூவரும் கொண்டு வந்த பயணப்பொதிகளில் இருந்து 559 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 80 டெப் கணினிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி 6 கோடியே 20 இலட்சம் ரூபா என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஶ்ரீ)

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works:


| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA | | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Grade | Specialty | | |
| 1 | YA/CWP/RE/ C2/2025/20 | Renovation of Engineering Services Division at University of Jaffna | 6.25 | 60 | C8 or above | Building Construction | Rs. 65,000.00 06.02.2026 | Rs. 2,500.00 |
| 2 | YA/CWP/RE/ C2/2025/21 | Supplying, Fabricating & Fixing of Shelves for Record Room at University of Jaffna (Stage –II) | 4.22 | 60 | C8 or above | | Rs. 45,000.00 06.02.2026 | Rs. 1,500.00 |
| 3 | YA/CWP/RE/ C2/2025/22 | Refurbishment of Balasingam Hostel at University of Jaffna | 30.43 | 90 | C6 or above | | Rs. 310,000.00 06.02.2026 | Rs. 8,000.00 |
| 4 | YA/CWP/RE/ C2/2025/23 | Renovation of Wash Room at Department of Micro Biology, Faculty of Medicine, University of Jaffna | 1.49 | 45 | C9 or above | | Rs. 15,000.00 06.02.2026 | Rs. 1,000.00 |
| 5 | YA/CWP/RE/ C2/2025/24 | Refurbishment of Auditorium at Faculty of Siddha Medicine, University of Jaffna | 16.48 | 90 | C7 or above | | Rs. 170,000.00 06.02.2026 | Rs. 4,500.00 |
| 6 | YA/CWP/RE/ C1/2025/27 | Refurbishment of Toilets on the Second Floor of the Department of Chemistry, Faculty Science, University of Jaffna | 7.74 | 60 | C8 or above | | Rs. 80,000.00 06.02.2026 | Rs. 3,000.00 |
| 7 | YA/CWP/RE/ C1/2025/28 | Supply & Installation of Air Conditioner for the Dean's Office and Board Room, Faculty Science, University of Jaffna | 2.84 | 30 | C9 or above (Building)/ EM5 or above (Electrical Installation) | | Rs. 30,000.00 06.02.2026 | Rs. 1,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for the contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the relevant field with the Construction Industry Development Authority (CIDA), as specified in the table above
4. Interested bidders may obtain further information from **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**
   Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** from **25th September 2025** until **09th October 2025** from **9:00 hrs to 16:00 hrs and** upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No **"97000060000276"** should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch,** to reach **on or before 10.00 hrs on the 10th October, 2025.** Bids will be opened soon after closing, at **10.00 hrs on the 10th October, 2025** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **91 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of ***"Vice Chancellor, University of Jaffna."***
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 03rd October, 2025.

**Chairman, Department Procurement Committee,**
**University of Jaffna, 25.09.2025**

(C-3949)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள் :- சிவசாந்தன்)

## தென்மராட்சிப் பகுதியில்

# விடுதிகளாக இயங்கும் வீட்டுத்திட்ட வீடுகள்

(சாவகச்சேரி)

**சாவகச்சேரிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் வீட்டுத்திட்ட வீடுகளை விற்பனை செய்கின்ற மற்றும் விடுதிகளாக நடத்துகின்ற நிலைமை காணப்படுவதாக சாவகச்சேரிப் பிரதேச சபையின் உபதவிசாளர் யோகேஸ்வரன் தெரிவித்தார்.**

அண்மையில் இடம்பெற்ற அபிவிருத்திக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாவற்குழி ஐயனார் கோவிலடி வீடமைப்புத் திட்டம் மற்றும் சிங்கள குடியேற்றம் ஆகிய பகுதிகளில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட வீடுகளே இவ்வாறு கைமாற்றப்பட்டும், விடுதிகளாக மாற்றப்பட்டும் காணப்படுகின்றன.

சுமார் பத்து வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் நாவற்குழி சிங்கள கிராமத்தில் எட்டு வீடுகள் விடுதிகளாக இயக்கப்படுகின்றன என்றார்.

இதன்போது கூட்டத்திற்கு தலைமை வகித்த பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் இது தொடர்பாக வீடமைப்பு அதிகார சபையினரை வினவிய போது வீட்டுத்திட்ட வீடுகளை விற்பனை செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் விடுதிகளாக நடத்தப்படும் வீடுகள் தொடர்பில் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

## சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற் தொழில் மற்றும் நீர்வள அமைச்சர் இ.சந்திரசேகர் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராசா,சங்கானை பிரதேச செயலர் திருமதி. உ . கவிதா,யாழ் மாநகர சபை உறுப்பினர் எஸ். கபிலன் மற்றும் சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் திருமதி கோ.கிருஸ்ணவேணி ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 200 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 160 | 150 | 200 | 250 |
| தக்காளி | 200 | 150 | 250 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 250 | 200 | 200 |
| கோவா | 250 | 200 | 250 | 180 | 200 |
| கரட் | 200 | 250 | 350 | 230 | 250 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 100 | 150 | 100 | 100 | 300 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 100 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 150 | 220 | 150 | 350 | 200 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 170 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 100 | 120 |
| கறிமிளகாய் | 350 | 350 | 350 | 300 | 350 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 600 | 600 | 500 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 140 | 80-150 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 170-230 | 160-200 |
| இராசவள்ளி | 800 | 650 | 1000 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 100 | 400 |
| முள்ளங்கி | 120 | 150 | 200 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 90 | 250 |

## ஏலவிற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள 1203/4 கியூப் மணல், 3 கியூப் கிரவல் என்பவை எதிர்வரும் 27.09. 2025 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எனவே குறித்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களைப் பார்வையிடலாம்.

பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்த கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும். ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினையும் கிரவலினையும் புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று எதிர்வரும் 30. 9. 2025 மற்றும் 4.10. 2025 ஆம் திகதிகளில் நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும். எனப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை ஐக்கிய சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை பட்டின சபை வீதி, வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன காரியாலயத்தில் தலைவர் செ.குமாரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விருந்தினர்களாக சனசமூக நிலைய உத்தியோகத்தர் வி.ஜெயராஜன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் ர.குகதாசன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.மாவட்ட பொது வைத்தியசாலையின் பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்



**(கண்டாவளை)**

**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவு நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.**



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் சுமார் 5,320 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்ட பெண் நோயியல் நிலையமானது தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இந் நிலையில் குறித்த சிகிச்சைப் பிரிவு நேற்றைய தினம் வட மாகாண ஆளுநா. வேதநாயகனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர்,வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், நோயாளர் நலன் புரிசங்கத்தினர், என பலர் கலந்து கொண்டனர். (8-315)

# விருப்பத்துடன் கல்விகற்கும் சமூகத்தை உருவாக்குவோம்

## அமைச்சர் சரோஜா போல்ராஜ்

(கொழும்பு)

பாடசாலையில் நடைமுறையிலுள்ள தண்டனையளிக்கும் முறையின் காரணமாக, நல்ல நிலைமைக்கு வந்த மாணவர்களை விட கல்வியை பாதியில் இடைநிறுத்தியவர்களே அதிகம் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பாராளுமன்றில் சுட்டிக் காட்டினார்.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்த) சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உடல் ரீதியிலான தண்டனை தொடர்பான ஆய்வொன்றில், குறித்த தண்டனையால் எதிர்பார்த்த நோக்கங்களை விட, வேறு பெறுபேறுகளே அதிகளவில் கிடைத்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்தகைய உடல் ரீதியான தண்டனைகள் மூலம், வன்முறை, திருட்டு போன்ற சமூக விரோத எண்ணங்கள் மாணவர்கள் மத்தியில் உருவாகின்றன. அத்துடன், பிழையான வழிகளில் செல்லுதல், ஆக்ரோஷமான மற்றும் குழப்பமான மனவெழுச்சிகளும் நடத்தைகளும் உருவாகுதல், ஆசிரியர்.மாணவர் இடையிலான தொடர்பு படிப்படியாக விலகுதல் போன்ற விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

அதே நேரத்தில், தோல்வி மனநிலை உருவாகி, சமூக விரோத செயல்களில் ஈடுபடும் ஒருவராக மாணவர்கள் மாறுவதற்கும் அதிக வாய்ப்புகள் தோன்றுகின்றன.

பிற்காலத்தில் இத்தகைய மாணவர்கள், பொதுச் சொத்துகளை அழிப்பவர்களாக மாறுவதுடன், அவர்களின் அடிப்படை கல்வியறிவைப் பெறும் வாய்ப்புகள் இழக்கப்படுகின்றன. தண்டனை பெற்ற மாணவர்கள் நல்ல நிலைக்கு வந்தார்கள் என்பதை விட, தண்டனையால் மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிய சம்பவங்களே அதிகம் காணப்படுகின்றன.

எனவே, மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கு உடல் ரீதியான தண்டனையளித்தல் பொருத்தமற்றதாகும்.

இதற்காகவே, தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திருத்தத்தின் மூலம், சமூகத்தில் மாணவர்களுக்கு எந்த இடத்திலும் அடிப்படை மனித உரிமை மீறல் ஏற்படாத வகையில் சட்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

அதே நேரத்தில், சிறுவர்களை பணிக்கமர்த்துதல், சிறுவர் திருமணம், கடத்தல், துஷ்பிரயோகம் போன்றவற்றிலிருந்து சிறுவர்களைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் இதன் மூலம் மேற்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் கொள்கைகள் மற்றும் சட்ட ஏற்பாடுகள் வழியாக மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்க அரசாங்கம் முனைவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக மாணவர்கள் விருப்பத்துடன் பாடசாலைக்கு செல்வதை விட தண்டனைக்குப் பயந்தே பாடசாலைக்கு செல்வதைக் காண முடிகிறது.

எனவே, தண்டனைக்குப் பயந்து நடுங்கும் மாணவர் சமூகத்திற்கு மாற்றாக, சுய ஒழுக்கம் மற்றும் தன் நம்பிக்கையுடன் கூடிய மாணவர்களை உருவாக்குவதற்காகவே இந்த சட்ட திருத்தம் கொண்டு வரப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்



(கரணவாய்)

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக செல்வி ஜானகி கிருஸ்ணபிள்ளை நேற்று புதன்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றுள் ளார்.

பருத்தித்துறை சென் தோமஸ் ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய இவர் நேற்று முதல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (8-60)

# புதிய நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பழ உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க புதிய நிர்வாகத் தெரிவு எதிர் வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மீசாலையில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.நிமலரூபன் அழைப்பு விடுத்துள்ளார். (8-30)



யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியில் உயர்தரம் வரை கற்று சட்டத்தரணியான மாணவியையும் விஞ்ஞானப் பிரிவில் தேறி யாழ். பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவனையும், இறுதியாக நடைபெற்ற உயர்தர பரீட்சையில் 3A பெற்று (மாவட்ட நிலை 2) மாணவியையும் இறுதியாக நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரிட்சையில் 136 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவியையும் கோண்டாவில் மேற்கு ஈஸ்வரன் ஆலய மண்டபத்தில் வைத்து நலன் விரும்பிகள் குழுவினர் கௌரவித்தனர்.

# தியாகதீபம் திலீபனின் 10 ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 10ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோர்வேயில் குண்டு வெடிப்பு
## மக்கள் வெளியே வரத் தடைவிதிப்பு



(ஒஸ்லோ)

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. பொலிஸார் சந்தேகப்படும் படியான மூவரை கைது செய்துள்ளனர்.

பார்க்வீன் மற்றும் பைல்ஸ்ட்ரெட் பகுதியில் இந்த இரண்டு குண்டுவீச்சு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது. அப்பகுதியில் வசிப்போர் அச்சமும், பீதியும் அடைந்தனர்.

நோர்வே பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அந்த பகுதியைச் சுற்றி வளைத்த அவர்கள், தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது அங்கு வெடிக்காமல் இருந்த கையெறி குண்டு ஒன்றை கண்டுபிடித்து, செயலிழக்கச் செய்தனர்.

அங்கு சுற்றித்திரிந்த சந்தேக நபர்கள் மூவரை கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து ஒஸ்லோ பொலிஸ் தலைவர் பிரையன் ஸ்கொடனஸ் கூறியதாவது:

மத்திய ஒஸ்லோ பகுதியில் குண்டு வெடித் துள்ளது. தேடுதல் வேட்டையின் போது சந்தேகத்தின் பேரில் 3 பேரை கைது செய்திருக்கிறோம்.

அவர்களுடன் தொடர்புடைய மற்றவர்களையும் தேடி வருகிறோம்.

சம்பவம் நடந்த இடம், தற்போது முழு பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

குண்டுகள் வெடித்த பகுதிக்குள் யாரும் நுழைய வேண்டாம், குடியிருப்புகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அப்பகுதி மக்களை பொலிஸார் அறிவுறுத்தி இருக்கின்றனர். (நி)

# ஒவ்வொரு ம
# ஒரு குழந்தையைக் கெ
## ஐ.நா பொதுச்சபையில் து

**(வோஷிங்டன்)** ●●●●●●●●●●●● **ஒவ்வொரு மணிநேரமும் ஒரு குழந்தையை இஸ்ரேல் கொலை செய்கிறது. கடந்த 23 மாதங்களாக இதுதான் நடக்கிறது. இரண்டு, மூன்று வயது குழந்தைகள் மயக்க மருந்து இல்லாமல் தங்கள் உறுப்புகளை இழக்கின்றனர். அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடந்த ஐ.நா. பொதுச்சபையில் துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் ஆவேசமாகத் தெரிவித்தார்.**

அவர் பேசியதாவது. "நம்மில் ஒவ்வொருவரின் கண் முன்னேயும், காசாவில் 700 நாட்களுக்கும் மேலாக இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கிறது.

கடந்த 23 மாதங்களாக, இஸ்ரேல் ஒவ்வொரு மணிநேரமும் ஒரு குழந்தையைக் கொன்றுள்ளது. இவை வெறும் எண்கள் அல்ல ஒவ்வொன்றும் ஒரு அப்பாவியான உயிர்.

காசாவில் உள்ள மனிதாபிமான பேரழிவு நவீன வரலாற்றில் மிகப்பெரியது. இரண்டு, மூன்று வயது குழந்தைகள் மயக்க மருந்து இல்லாமல் குண்டுவெடிப்புகளால் தங்கள் உறுப்புகளை இழக்கின்றனர்.

## விமானத்தின் 'லேண்டிங் கியரில்' ஒளிந்து
## இந்தியா சென்ற ஆப்கான் சிறுவன்

(காபூல்)

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 13 வயது சிறுவன் ஒருவன், விமானம் ஒன்றின் லேண்டிங் கியரின் மேல் பக்கத்தில் ஒளிந்துகொண்டு டில்லி வரை பயணித்துள்ளான்.

**டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவன் அதே விமானத்தில் ஆப்கானிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது, டில்லி விமான நிலையத்தில் உள்ள காம் ஏர்லைன்ஸ் விமானக் குழுவினர் ஒரு சிறுவன் விமானத்தின் அருகே நடந்து சென்றதை கவனித்துள்ளனர்.

அவர்கள் உடனடியாக விமான நிலையத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தனர்.

அந்த சிறுவன் விசாரணைக்காக மூன்றாவது முனையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

விசாரணையில் அந்த சிறுவன் ஆப்கானிஸ்தானின் குந்துஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது.

காபூல் விமான நிலையத்திற்குள் நுழைந்து விமானத்தின் பின்பக்கத்தில் உள்ள சென்ட்ரல் லேண்டிங் கியர் பகுதியை தான் அடைந்ததாக விசாரணை அதிகாரிகளிடம் சிறுவன் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்குப் பிறகு, எந்த சதித்திட்டமும் இல்லை யென தீர்மானிக்கப்பட்ட நிலையில் விமானம் பாது காப்பாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது. சிறுவனின் பெயரும் அடையாளமும் வெளியிடப்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு இந்தச் சம்பவம் தொடர்பாக அதிகாரப்பூர்வமாக எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

ஆனால் தலிபான் அரசின் எல்லையோர காவற்படையின் செய்தித் தொடர்பாளர் அப்துல்லா ஃபேரூக்கி இந்தச் சம்பவம் பற்றி விசாரித்து வருவதாக கூறியுள்ளார்.

இதனிடையே, சிறுவன் விமானத்தை அடைந்தது காபூல் விமான நிலையத்தின் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஒருவர் விமானத்தில் ஒளிந்து கொண்டு இன்னொரு இடத்திற்கு பயணித்தது இது முதல் முறையல்ல.

ஆனால் விமானத்தின் லேண்டிங் கியர் பகுதியில் ஒழிந்துகொண்டு ஒருவர் பயணித்தது இதுவே முதல்முறை ஆகும்.

ஆக்சிஜன் பற்றாக்குறை மற்றும் தீவிரமான குளிரில் அந்த உயரத்தில் உயிர்பிழைப்பது அசாத்தியமானது என வல்லுநர்கள் கூறுகின்றனர். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ணிநேரமும் கொல்லும் இஸ்ரேல்!

## ருக்கி ஜனாதிபதி ஆவேசம்



குழந்தைகள் பசி மற்றும் மருந்து பற்றாக்குறையால் இறக்கும் உலகில் அமைதி இருக்க முடியுமா? கடந்த நூற்றாண்டில்கூட மனிதகுலம் இத்தகைய காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டதில்லை.

இது மனிதகுலத்தின் மிக மோசமான நிலை. காசாவில் நடப்பது போர் இல்லை. இது ஒரு படையெடுப்பு, ஒரு இனப்படுகொலை, ஒரு மிகப்பெரிய படுகொலைக் கொள்கை" என்று தெரிவித்தார்.


பாலஸ்தீன நாட்டை அங்கீகரித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்த எர்டோகன் மற்ற நாடுகளும் தாமதமின்றி செயற்பட வலியுறுத்தினார்.

காசாவில் உடனடியாக போர்நிறுத்தம், தடையற்ற மனிதாபிமான அணுகல் மற்றும் இஸ்ரேலின் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் ஆகியவற்றை எர்டோகன் கோரினார்.

மேலும் இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பை காசா மற்றும் மேற்குக் கரைக்கு அப்பால் சிரியா, ஈரான், ஏமன், லெபனான் மற்றும் கட்டாருக்கு விரிவுபடுத்தி, பரந்த பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக எர்டோகன் குற்றம் சாட்டினார். (நி)

## AI தொழில்நுட்பத்தால் பெண்களுக்கு அதிக பாதிப்பு

### ஆய்வில் தகவல்



(ஜெனீவா)

உலக அளவில் தற்போது ஏ.ஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் அதிகமாக உள்ளது.


அனைவரிடம் நவீன கையடக்க தொலைபேசி இருப்பதால் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு மக்களிடையே அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் ஐநா நடத்திய ஆய்வில் புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இதன்படி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் தாக்கம் காரணமாக உலகளவில் பணியாற்றும் ஆண்களில் 21% பேரின் வேலை வாய்ப்பு பாதிக்கப்படும் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன் பெண்களில் 28% பேருக்கு வேலை வாய்ப்பு இழப்பு ஏற்படக்கூடும் என்றும் இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

## பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இத்தாலியில் போராட்டம்



(வத்திக்கான்)

பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க வலியுறுத்த கோரி இத்தாலியில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக இங்கிலாந்து, கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

இருப்பினும், இத்தாலிய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி பாலஸ்தீனத்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்க திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இதற்கு முன்பு ஆதரவு தெரிவித்து வந்த அவர் திடீரென்று தனது முடிவை மாற்றியுள்ளார்.

இதற்கு எதிராக இத்தாலி முழுவதும் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பல்வேறு பாலஸ்தீன ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த மோதல்களில் 60 இற்கும் மேற்பட்ட பொலிஸார் படுகாயம் அடைந்துள்ளனர்.

மேலும், போராட்டங்களின் எதிரொலியால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது ஹமாஸின் அட்டூழியங்களுக்கான வெகுமதி - ட்ரம்ப்

(வோஷிங்டன்)

உலகில் பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிப்பதில் ஈரான் முதலிடத்தில் உள்ளது. ஈரான் அணு ஆயுதம் வைத்துக்கொள்ள அனுமதிக்க முடியாது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 80ஆவது ஐ.நா. பொதுச்சபை கூட்டம் நடைபெற்று வருகிறது.

இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்,

பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது ஹமாஸ் ஆயுதக் குழுவினரின் அட்டூழியங்களுக்கு கிடைக்கும் வெகுமதியாகும்.

அமைதியை விரும்புபவர்கள் ஹமாஸ் ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்ட இஸ்ரேலிய பணய கைதிகளை விடுதலை செய்ய குரல் கொடுக்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

பாலஸ்தீனத்[illegible] நாடாக அங்கீகரிப்பதாக இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அண்மையில் அறிவித்த நிலையில் ட்ரம்ப் இவ்வாறு பேசியுள்ளார்.

தொடர்ந்து சட்டவிரோத குடியேற்றம் குறித்து பேசிய ட்ரம்ப், சட்டவிரோத குடியேறிகள், அகதிகளால் ஐரோப்பிய நாடுகள் மிகப்பெரிய பிரச்சினையை சந்திக்கிறது.

அவர்களை கட்டுப்படுத்த ஐரோப்பிய நாடுகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சட்டவிரோத குடியேறிகள், அகதிகளால் சுதந்திர உலகின் பெரும் பகுதி அழிகிறது" என்றும் அவர் [illegible] (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வானைத் தாக்கிய ‘ரகசா’ சூறாவளி

## 14 பேர் உயிரிழப்பு - 124 பேர் மாயம்

(தாய்பே)

தாய்வானின் பிரபலமான சுற்றுலா மையமான கிழக்கு மாகாணமான ஹுவாலியனில் ரகசா சூறாவளி தாக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூறாவளியின் போது ஏற்பட்ட கடும் மழையினால் மலைகளில் உள்ள தடுப்பு வாவியில் நீர் நிரம்பி வழிந்து நகரத்தை வெள்ளத்தில் மூழ்கடித்ததில் 124 பேரைக் காணவில்லை எனத் தீயணைப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் தாய்வானை தாக்கிய சூறாவளி தற்போது சீனாவின் தெற்கு கடற்கரையையும் ஆசிய நிதி மையமான ஹொங்கொங்கையும் தாக்கியுள்ளது.

கிழக்குப் பகுதியில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட மண்சரிவுகளால் உருவான தடுப்பு வாவி நேற்று பிற்பகல் அதன் கரைகளை உடைத்து குவாங்டாங் நகருக்குள் வெள்ளம் நீர் வடிந்தோடியுள்ளது.



சுனாமி போன்று வெள்ளம் நீர் தாக்கியது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த சூறாவளி காரணமாக தெற்கு சீனாவின் குவாங்டாங் மாகாணத்திலிருந்து சுமார் 370,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தெற்கு சீனப் பகுதியில் அடுத்த சில மணி நேரங்களுக்குள் பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக பாரிய மண் சரிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- NRC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,பட்டதாரி
தொ.இ: B/16098

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: மகம்
கி-பா-17 1/2
உயரம்:5'2"
தகைமை/தொழில்-O/L,கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16099

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
12இல் செவ்
கி-பா-21
உயரம்:5'3"
தகைமை/தொழில்:
Hotel Management, Manager (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16100

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:மகம்
கி-பா- 5 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Police Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/13361

பிறப்பு: 1984- இந்து
நட்சத்திரம்- பூசம்
கி-பா- 52
12இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:
Hotel Management, London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/12493

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு -1995-இந்து
நட்சத்திரம் -பூரட்டாதி
உயரம்:150CM
தகைமை/தொழில்:
A/L விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு, விவாகரத்தானவர்
தொ.இ: G/14117

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:பூசம்
கி.பா-61
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Banking Diploma BBM (Following) bank officer
எதிர்பார்ப்பு:அரச/தனியார் வேலை, விவாகரத்தானவர்
தொ.இ: G/14026

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: -28 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: College, Bsc (Final Year), Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/13990

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:அனுசம்
3இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14037

பிறப்பு-1988-இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா: 48
உயரம்:5
தகைமை/தொழில்:BA,MA,M.Phil
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14042

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 451

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## குணமும் கோபுரமும்!

ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு பெரிய கோயில் கட்டினார்.

பல ஊர்களிலேயிருந்து சிற்பிகள் எல்லாம் கொண்டு வந்தார். அழகழகாக சிற்பங்களை செய்யச் சொன்னார். ஊரிலே உள்ள மக்களும் கோயில் கட்டுவதற்கு அவர்களாலே முடிந்த உதவியை செய்தார்கள்.

இரவு பகலாக வேலை நடந்தது கோயில் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்துகொண்டு வந்தது. அந்த ஊரிலே ஒரு வயதான அம்மா இருந்தார்கள்.

ரொம்ப ஏழை அவர்களுக்கு மனதுக்குள்ளே ஒரு உறுத்தல். “இந்த ஊரிலே எல்லோரும் இந்த கோயில் கட்டுவதற்கு அவர்கள் அவர்களாலே முடிந்த உதவியை செய்து கொண்டிருந்தார்கள் நம்மாலே ஒன்றும் செய்ய முடியவில்லையே” என்று நினைத்துக் கவலைப்பட்டார். அவர்களுக்கு மனது கேக்கவில்லை. நல்ல வெயில் நேரத்திலே சிற்பிகள் எல்லாம் சிரமப்பட்டு சிலை வடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தாகம் எடுக்கும் அதனாலே சிரமப்பட்டு, ஒரு குடத்திலே தண்ணீரை எடுத்து இடுப்பிலே வைத்துக்கொண்டு மெதுவாக கொண்டு போய் அங்கே வேலை செய்கின்றவர்களுக்குத் தாகம் எடுக்கும் போதெல்லாம் ஒரு குவளையிலே தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஏதோ அந்த அம்மாவாலே முடிந்த சின்ன உதவி அது! இப்படி கொஞ்சம் கொஞ்சமாக வேலை நடந்தது. கோபுரம் உயர்ந்தது. எல்லா வேலையும் முடிந்தது.

இனிமேல் கடைசியாக கர்ப்பக் கிருகத்தின் மேலே விமானம் அமைக்க வேண்டியதுதான். அந்த வேலையும் ஆரம்பமானது! அந்த சிற்பிகளிலேயே அனுபவசாலியான ஒருவர். இந்த அம்மாவைத் தேடி வந்தார். “பாட்டி! உங்களிடம் இருக்கின்ற ஏதாவது ஒரு பொருளைக் கொடுங்கள். அதை விமானத்திலே வைக்கலாம் என்று நினைக்கிறோம்!” என்றார். இந்த அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஏதாவது இருந்தால் தானே கொடுக்கலாம். எதுவும் இல்லையே என்று யோசித்தார்கள் “இதோ பாருப்பா... என்னிடம் என்ன இருக்கு. இதோ வாசப்படியிலே கிடக்கிறதே. இந்தக் கல்லுதான் இருக்கு. வேண்டுமென்றால் இதை எடுத்துக்கொண்டு போங்கள் என்றார்.

உடனே அந்தக் கல்லை பேர்த்து எடுத்துக்கொண்டு போனார்கள், அங்கே போய் பார்த்தால் என்ன ஆச்சரியம்?

கலசங்களை அந்த விமானத்து உச்சியிலே அமைப்பதற்கான பிரம்மரந்திரத்தை மூடுவதற்கு கருங்கல் ஒன்று தேவையாக இருந்தது. இவர்கள் எடுத்துக்கொண்டு போன கல் அதுக்கு ரொம்பப் பொருத்தமாக அமைந்து போனது! ஏதோ அதற்காகவே அளவெடுத்து செய்தது மாதிரி அமைந்தது! அந்தக் கல்லையே அங்கே பதித்தார்கள்.

ஒரு வழியாக கோயிலைக் கட்டி முடிந்தது!

அடுத்தது கும்பாபிஷேகம். அதுவும் ரொம்ப சிறப்பாக கோலாகலமாக நடந்து முடிந்தது.

இவ்வளவையும் பார்த்த அந்த ராஜாவுக்கு மனதுக்குள்ளே ரொம்பப் பெருமையாக இருந்தது. இவ்வளவு பெரிதாக இந்த கோயில் உருவாவதற்கும். இவ்வளவு சிறப்பாக இந்த விழா நடப்பதற்கும் நாம் தானே காரணம் என்று மனதுக்குள்ளே நினைத்துக்கொண்டார்.

இப்படி நினைத்துக்கொண்டே அன்றைக்கு இரவு அரண்மனையிலே படுத்துத் தூங்கினார். உடனே ஒரு கனவு.

ஆண்டவனே அந்த ராஜாவின் கனவில் வந்தார். ராஜா ஆண்டவனை வணங்கினார். “இறைவா... உங்களுக்காக நான் கட்டி யிருக்கின்ற கோயில் எப்படி இருக்கு? நல்லா இருக்கா?”

என்று கேட்டார் ராஜா. அதற்கு இறைவனே சொன்ன பதில், என்ன தெரியுமா? “நீ கட்டிய கோயிலிலே அந்த கிழவியின் நிழலிலே நான் சுகமாக இருக்கிறேன்!” இப்படி சொல்லிவிட்டு இறைவன் மறைந்து விட்டார்.

கனவு கலைந்தது. ராஜா விசாரிச்சார். “யார் அந்தக் கிழவி?” என்று. எல்லாரும் விபரம் சொன்னார்கள். அப்பத்தான் ராஜா நினைத்துப் பார்த்தார். இந்தக் கோயிலை நானே கட்டினதாகப் பெருமைப்பட்டேனே.. ஆனால் அந்த வயதான அம்மா வீட்டு வாசலிலே கிடந்த கல். அது இறைவனுக்கு சுகமான நிழல் கொடுப்பதாகச் சொல்கிறாரே!” என்பதை எண்ணிப் பார்த்தார். “நான்” என்கின்ற எண்ணம் நழுவிப் போய் விட்டது. கோபுரம் எவ்வளவு பெரிது முக்கியமில்லை! குணம் எவ்வளவு பெரிது என்பதுதான் முக்கியம். “அந்த வயதான அம்மா நம் நாட்டிலே வாழ்வது தான் நமக்கு உண்மையான பெருமை!” என்று நினைத்தார் ராஜா.

இந்தக் காலத்திலேயும் ஒரு ஊரிலே ஒரு கோயில் கட்டினார்கள். எல்லா ஜனங்களும் அவர்களாலே முடிந்ததை செய்தார்கள்.

நம் நபர் ஒருவன் அந்த திருப்பணிக்குழு தலைவரைப் போய்ப் பார்த்தான். “நான் ஏதாவது ஒத்துழைக்க வேண்டுமா ஐயா!” என்று பணிவாக கேட்டான். திருப்பணிக்குழுத் தலைவர் சொன்னார்.

“இதோ பாரப்பா இந்த கோயில் கட்டி முடிக்கின்ற வரைக்கும் உன்னுடைய ஒத்துழைப்பு தேவையில்லை. கட்டி முடித்து கும்பாபிஷேகம் ஆனதற்கு அப்புறம் உன்னுடைய ஒத்துழைப்பு அவசியமாகத் தேவை!”

“அதற்குப் பிறகு நான் என்ன செய்ய வேண்டும். சொல்லுங்கள்!” என்றான். “இந்தச் சாமி சிலையை நீ திருடிக்கொண்டு போகாமல் இருக்க வேண்டும்!” என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் சுற்றிவளைத்த அதிகாரிகள்

(மன்னார்)


மன்னார் நகர பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட உணவகம் ஒன்று சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த நிலையில் குறித்த உணவகம் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

மன்னார் -தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்திருந்த குறித்த உணவகம் உரிய முறையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் அசுத்தமாக உணவுகள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் மன்னார் நகரசபை பொது சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அகப்பட்டது.

குறித்த உணவகம் எந்த ஒரு வியாபார உரிமமும் இன்றி இயங்கி வந்ததுடன் உணவகத்தின் கழிவுநீர் உரிய விதமாக அகற்றப்படாமல் புழுக்கள் இலையான்கள் உருவாகியும் அதே நேரம் ஆரோக்கியமற்ற விதமாக உணவுகள் தயாரிக்கப் பட்டிருந்தமை , அத்துடன் உணவுப் பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த உணவகத்திற்கு எதிராகவும் உரிமையாளர் மீது பல்வேறு பிரிவுகளில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8-285)

# LOLC இன் கால்நடை காப்பீடு
## மனித - சிறுத்தை சகவாழ்வை ஊக்குவிக்கிறது




இலங்கை சிறுத்தை (பாந்தெரா பர்டஸ் கோடியா). இலங்கைக்கு மட்டுமே சொந்தமானது மற்றும் 1,000 இற்கும் குறைவான முதிர்ந்த நபர்கள் காடுகளில் எஞ்சியுள்ளனர், இது வாழ்விட இழப்பு, இரை குறைப்பு, கண்ணிகள் மற்றும் பழிவாங்கும் கொலைகளுக்கு எதிராக போராடுவதால், ஒரு நிலையற்ற எதிர்காலத்தை எதிர்கொள்கிறது.

இலங்கையின் சுற்றுச்சூழல் அமைப்புகள், சுற்றுச்சூழல் சுற்றுலா மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பாளராகவும், ஒரு முக்கிய இனமாகவும், அதன் உயிர்வாழ்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இருப்பினும், மனித-சிறுத்தை மோதல் மிகப்பெரிய அச்சுறுத்தல்களில் ஒன்றாகத் தொடர்கிறது. கவனிக்கப்படாத கால்நடைகள் மற்றும் செல்லப்பிராணிகளை வேட்டையாடுவது பெரும்பாலும் பழிவாங்கும் கொலைகளுக்கு இட்டுச் செல்கிறது. இது கிராமப்புற சமூகங்களின் உள்ளுணர்வுச் செயலாகும்.

இந்தச் சுழற்சியை முறியடிக்க, LOLC ஹோல்டிங்ஸ், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் (UNDP) இலங்கையின் பல்லுயிர் நிதி முன்முயற்சி (BIOFIN) மற்றும் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (WNPS) ஆகியவற்றுடன் இணைந்து, வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழ், LOLC பொதுக் காப்புறுதி மூலம் முன்னோடி கால்நடை காப்பீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வகையான முதல் முயற்சி, சிறுத்தை வேட்டையாடுதலால் கால்நடைகளை இழக்கும் விவசாயிகளுக்கு நிதி இழப்பீடு வழங்குகிறது, பழிவாங்கும் கொலைகளின் தேவையை நீக்குகிறது மற்றும் சகவாழ்வுக்கான நடைமுறை, நிலையான தீர்வை வழங்குகிறது. இந்த முன்னோடி திட்டம் ஹிங்குராக்கொடை, சிகிரியா, மின்னேரியா மற்றும் தம்புள்ளவில் செயற்படுத்தப்படும், 100 அல்லது அதற்கும் குறைவான மந்தைகளைக் கொண்ட கால்நடை விவசாயிகளை இலக்காகக் கொண்டது. சரிபார்க்கப்பட்ட வேட்டையாடுதல் வழக்குகள் காப்பீட்டு கோரிக்கைகளுக்கு தகுதி பெறும், சிறுத்தையின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் சரியான நேரத்தில் நிவாரணம் உறுதி செய்யப்படும்.

இலங்கையின் சின்னமான சிறுத்தையைப் பாதுகாப்பதற்காக 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஐந்து ஆண்டு WNPS-LOLC பல பிராந்திய சிறுத்தை பாதுகாப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் ஆறு செயலில் உள்ள பாதுகாப்பு மண்டலங்கள் நிறுவப்பட்டுள்ளன. இன்றுவரை ரூ.10.6 மில்லியனுக்கும் அதிகமான முதலீடு செய்யப்பட்டுள்ள இந்த முயற்சி, கள ஆராய்ச்சி, சமூக ஈடுபாடு, கண்ணி அகற்றுதல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. இலங்கையில் தனியார் நிதியுதவியுடன் கூடிய மிகப்பெரிய சிறுத்தை பாதுகாப்பு முயற்சிகளில் ஒன்றாகும்.

## UK,Canada,USA and Ireland நாடுகளுக்கான IDP இன்
# மாபெரும் கல்வி கண்காட்சி

எதிர்காலத்தை திட்டமிட IDP Education நிறுவனம் இலங்கையின் மிகப்பெரிய UK, USA, Canada and Ireland கல்வி கண்காட்சியை நடத்தவுள்ளது 45 இற்கும் மேற்பட்ட பிரபல பல்கலைக்கழகங்கள் இதில் பங்கேற்கவுள்ளன.

IDP Education நிறுவனம் நடத்தும் UK, USA, Canada and Ireland கல்வி கண்காட்சிகள் மீண்டும் இந்த ஆண்டு, இது இலங்கையின் மிகப் பெரிய சர்வதேச கல்விகண்காட்சி ஆகும். இதில் UK, USA, Canada and Ireland இலிருந்து 35 இற்கும் மேற்பட்ட புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் பங்கேற்க உள்ளன. இந்த கண்காட்சி, இலங்கை மாணவர்களுக்கு கல்வி மற்றும் தொழில் முனைவு வாய்ப்புகளை ஆராய ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

நிகழ்வு விபரங்கள்:

- 25 Sep – The Thinnai Hotel, Jaffna
- 27 Sep – Taj Samudra Hotel, Colombo

இலங்கையில் சர்வதேச கல்விக்கான தேவை அதிகரித்துவரும் நிலையில், IDP Education ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களை நோக்கி வழிகாட்டி வருகிறது. இந்த ஆண்டு இந்த கண்காட்சி, மாணவர்களுக்கு நேரடியாக பல்கலைக்கழக பிரதிநிதிகளை சந்தித்து, கல்வி எதிர்காலத்தை திட்டமிட ஒரு ஒரே இடத்தில் கிடைக்கும் வாய்ப்பாக அமைகிறது.

**IDP Education Sri Lanka Country Director- Mr. Ravi Chandran:**

"இலங்கையில் திறமையான மற்றும் உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட மாணவர்கள் அதிகம் உள்ளனர். சர்வதேச கல்வியின் மதிப்பை அவர்கள் உணரத்தொடங்கியுள்ளனர். இந்த கண்காட்சி, மாணவர்களுக்கு தங்கள் விருப்பங்களை ஆராய, பல்கலைக்கழக பிரதிநிதிகளை சந்திக்க மற்றும் தங்கள் கல்வி மற்றும் தொழில் இலக்குகளை நோக்கி முதல் படியை எடுக்க ஒரு சிறந்த மேடையாக இருக்கின்றது."

ரவி சந்திரன் கூறுகிறார்:

"IDP Education இல் இருந்து செல்லும், ஒவ்வொரு மாணவரும் உலகமேடையில் வெற்றி பெறும் திறன் கொண்டவர் என நாங்கள் நம்புகிறோம். உலக தரமான பல்கலைக்கழகங்களை அணுகும் வாய்ப்பை வழங்குவதன் மூலம், இலங்கை மாணவர்கள் தங்கள் கனவுகளை நனவாக்கும் முதல் படியை எடுக்க உதவுகிறோம். இந்த கண்காட்சி, உலக சமூகத்தில் தங்கள் இடத்தை உருவாக்க விரும்பும் இலங்கை மாண வர்களின் விருப்பத்தை பிரதிபலிக்கிறது. அவர்களை வலுப்படுத்தும் பணி யில் பங்கு வகிப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்."



எமது சேவைகள் பற்றிய விபரங்கள் இதோ!

- IELTS தேர்வை, நீங்கள் விரும்பும் எமது IDP Exam centre இல் எழுதுவதற்கான பதிவு வசதி செய்து தரப்படும்.
- University offer ஐ பெற்றுக்கொள்வதற்கான மற்றும் student விசா விண்ணப்பம் தொடர்பான சேவை முற்றிலும் இலவசம்
- வெளிநாடுகளில் கல்வியை தொடர வங்கி கணக்கினை ஆரம்பித்தல், பண பரிமாற்றம், SIM card, Health insurance cover மற்றும் தங்குமிட ஏற்பாடுகள் அனைத்தும் செய்து தரப்படும்.
- NSB bank ஊடாக கல்விக்கான கடன் வசதி, TT payment மற்றும் இதர சேவைகளுக்கான ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த ஆண்டு கண்காட்சியில் கலந்து கொண்ட மாணவர் ஒருவரிடமிருந்து,

"நான் கடந்த ஆண்டு இந்த கண்காட்சியில் கலந்துகொண்டேன். பல்கலைக்கழகங்களை நேரில் சந்தித்து, எனக்கு விருப்பமான பாடநெறிகள் பற்றி தெளிவாக அறிய முடிந்தது. விண்ணப்பம் எப்படி தயாரிக்க வேண்டும், என்ன உதவித்தொகைகள் கிடைக்கும் என்பதையும் தெரிந்துகொள்ள முடிந்தது. பல்கலைக்கழக பிரதிநிதிகளுடனான நேரடி ஆலோசனை மிகவும் பயனுள்ளதாக இருந்தது." மாணவர்கள் கல்வி வாய்ப்புகளை மட்டுமல்லாமல், சர்வதேசவேலை அனுபவம், பல பண்பாட்டு சூழல்களில் பழகும் திறன் மற்றும் பட்டம் பெற்ற பிறகு தொழில் முன்னேற்றம் போன்ற பல நன்மைகள் பற்றியும் அறிந்து கொள்ள முடியும்.

IDP Education நிறுவனம் NSB வங்கியுடன் இணைந்து, மாணவர்கள் கல்வி கடன்கள் பெறும் வகையில் சிறப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளது. இது அவர்களின் கல்விகனவுகளை நனவாக்க உதவும். வெளிநாட்டு கல்வி தொடர்பான வழிகாட்டி வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கான விண்ணப்ப செயல்முறை, வீசா, தங்குமிடம் போன்ற விடயங்கள் மாணவர்களுக்கு குழப்பமாக இருக்கலாம். IDP Education இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது- மாணவர்களுக்கு படிநிலை வழிகாட்டுதலுடன், தெளிவான முடிவுகளை எடுக்க உதவுகிறது.

# இராசிபலன்

25.09.2025
புரட்டாதி 09 , வியாழக்கிழமை
சதுர்த்தி முழுவதும்
சுவாதி முன்னிரவு 6.50 மணிவரை

சுப நேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சதுர்த்தி விரதம்,சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
உத்தரட்டாதி,ரேவதி

வளவன்

**மேஷம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்**
பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கலாம்.

**மிதுனம்**
உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கடகம்**
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி**
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**
உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணத்தால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்**
எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு**
இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்கள் எண்ணியபடி கைகூடும், பொருளாதா நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்**
ஆடம்பரப் பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்**
நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலைபேசி வழியில் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மீனம்**
எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள்.

தன்னைப் பணிவாரை தான் பணியும் காலமும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 872





அதைச் சொல்வதற்காகவே தங்களிடம் வந்தேன். எப்படியாவது என் பெரியன்னையை அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்ள வந்தேன். ஆனால் தாங்களே அதற்குப் பிரயத்தனம் செய்திருக்கிறீர்கள்!" என்றாள் இளைய பிராட்டி.

"ஆம், அம்மா! நானும் அத்தகைய முடிவுக்குத்தான் வந்திருந்தேன். மந்தாகினி தேவி உயிரோடிருக்கும் விவரத்தைச் சக்கரவர்த்தியிடம் தெரிவித்துவிடத் தீர்மானித்து விட்டேன். ஆனால் வெறுமனே சொன்னால் அவர் நம்பமாட்டார். முன்னே நான் கூறியது பொய், இப்போது சொல்வதுதான் உண்மை என்று எவ்விதம் அவரை நம்பச் செய்வது? அதற்காகவே அந்தத் தேவியை இங்கே அழைத்து வரச் செய்த பிறகு சொல்ல எண்ணினேன். நேரிலே பார்த்தால் நம்பியே தீரவேண்டும் அல்லவா? அதற்காகவே முக்கியமாக இலங்கைத் தீவுக்குச் சென்றிருந்தேன்.

ஆனால் தங்கள் தம்பியோடும் பெரிய வேளாரோடும் சதி செய்வதற்காக நான் ஈழ நாட்டுக்குப் போனேன் என்று பழுவேட்டரையர்கள் சக்கரவர்த்தியிடம் சொல்லியிருக்கிறார்கள். அது இல்லை என்று நிரூபிப்பதற்காகவேனும் மந்தாகினி தேவியைத் தங்கள் தந்தையின் முன்னால் கொண்டு போய் நிறுத்தப் போகிறேன்" என்றார் அநிருத்தர்.

"ஐயா! அந்த மாதிரி திடீரென்று கொண்டு போய் நிறுத்தினால் தந்தைக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டாலும் நேரிடலாம். முன்னால் தெரிவித்து விட்டுத்தான் அவர்களைப் பார்க்கச் செய்யவேணும்!" என்றாள் இளையபிராட்டி.

"ஆம், ஆம் அவ்வாறுதான் செய்ய உத்தேசித்திருக்கிறேன். இந்த வீட்டுக்கு மந்தாகினி தேவி வந்து சேர்ந்ததும் போய்ச் சொல்லலாம் என்று நினைத்தேன். இன்று காலை அரண்மனைக்கு வரவே எண்ணியிருந்தேன். அதற்குள் தியாகவிடங்கரின் மகள் நடுவில் தலையிட்டு எனக்கு ஏமாற்றத்தை அளித்துவிட்டாள். அந்தப் பொல்லாத பெண்ணுக்கு ஒருநாள் தகுந்த தண்டனை விதிப்பேன்!" என்றார் முதன் மந்திரி.

"ஐயோ! அப்படி ஒன்றும் செய்யாதீர்கள் அவள் நல்ல பெண்ணோ, பொல்லாத பெண்ணோ, நான் அறியேன். ஆனால் அருள்மொழியைக் கடலில் முழுகிப் போகாமல் காப்பாற்றியவள் பூங்குழலிதான் அல்லவா?"

"கடவுள் காப்பாற்றினார் என்று சொல்லுங்கள், தாயே! பாற்கடலில் பள்ளி கொண்ட பகவான் காப்பாற்றினார். அவருடைய அருள் இல்லாவிட்டால், இந்தச் சிறு பெண்ணால் என்ன செய்துவிட முடியும்? ஜோதிட சாஸ்திரம் உண்மையானால், கிரகங்கள், நட்சத்திரங்களின் சஞ்சார பலன்கள் மெய்யானால், இளவரசரைக் கடலும் தீயும் புயலும் பூகம்பமும்கூட ஒன்றும் செய்ய முடியாது"

"இறைவன் அருளின்றி எதுவும் நடவாதுதான். ஆனால் இறைவனுடைய சக்தியும் மனிதர்கள் மூலமாகத் தானே இயங்க வேண்டும்? பூங்குழலியை மறுபடியும் நாகப்பட்டினத்துக்கு அனுப்ப எண்ணியிருக்கிறேன், ஐயா! அல்லது, தாங்கள் வேறுவிதமாக எண்ணினால் பகிரங்கமாகவே அருள்மொழியை இங்கு வரச் செய்யலாம் என்று கருதினால்..."

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## காக்கையின் அருமை



ஒரு மரத்தில் ஆண் காகம் ஒன்றும் பெண் காகம் ஒன்றும் தன் குஞ்சுகளுடன் கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அங்கிருந்து சற்று தொலைவில் உள்ள நகரத்துக்கு வந்து, கிடைக்கும் உணவை உண்டு மாலை ஆனதும் தனது கூட்டுக்கு சென்றுவிடும் கூடவே குஞ்சுகளையும் கூட்டிக்கொண்டு போய் திரும்பி கூட்டில் விடும்.

தினம் தினம் மனிதர்கள் போடும் மிச்சம் மீதி உணவுகளை சாப்பிட்டு வாழ்ந்து வருவதை அந்த மரத்தில் வசிக்கும் மற்ற பறவைகள் கேலி செய்தன. எங்களை போல் காட்டுக்குள் சென்று வாழ முடியாத உன்னால் எங்களுக்குத்தான் கேவலம். பேசாமல் நீ மனிதர்களுடனே போய் வாழ வேண்டியதுதானே என்று கேட்டன.

காகம் அந்த பறவைகளிடம் நாங்கள் மக்களிடம் சென்று சாப்பிட்டு பிழைப்பதால் நகரத்தில் சுத்தம் ஏற்படுகிறது. ஒரு விதத்தில் நாங்கள் மனிதர்கள் வீசும் கழிவுகளை உண்பதால் நகரம் சுத்தமாக ஆகிறது. ஆகவே நாங்கள் உழைத்துத்தான் சாப்பிடுகிறோம். அதுவும் அவர்களாகப் பார்த்து கொடுப்பதை நாங்கள் பகிர்ந்துதான் உண்கிறோம் என்று பதில் சொல்லியது.

இருந்தாலும் மயில், புறா, குருவி போன்றவைகள் காக்கைகளை கேலியும் கிண்டலும் செய்து கொண்டுதான் இருந்தன. நீங்கள் எல்லாம் கருப்பாய் இருக்கிறீர்கள் அதனால் தான் மனிதர்கள் உங்களை அடிமை போல நடத்துகிறார்கள் என்று காக்கைகளின் நிறத்தையும் கேலி செய்து பேசின. மேலும் நீங்கள் மாமிசபட்சிணிகள், எங்களுடன் நீங்கள் வசிப்பது எங்களுக்கு வருத்தமாக உள்ளது என்றெல்லாம் பேசின.

இதை கேட்ட காக்கை குஞ்சுகள் மனம் வேதனைப்பட்டு தங்கள் பெற்றோரிடம் நாம் இங்கிருந்து போய் விடலாம் என்று சொல்லின. ஆண் காகம் உடனே தன் குஞ்சுகளை பார்த்து குழந்தைகளே மற்றவர்கள் பேசுவதற்கும், ஏசுவதற்கும் பயப்பட்டு நாம் கூட்டை விட்டு சென்றோம் என்றால் நம்மால் எங்கும் வசிக்க முடியாது. எங்கு சென்றாலும் ஏதாவது ஒரு பிரச்சனை இருந்து கொண்டேதான் இருக்கும். நாம் அதனை அனுசரித்து பழகிக்கொண்டோம் என்றால் நம்மால் நன்றாக வாழமுடியும். ஆகவே மற்றவர்கள் சொல்வதைப்பற்றி கவலைப் படாமல் வாழ கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய அருமை மற்றவர்களுக்கு புரியும் போது எல்லாம் சரியாகிவிடும் என்று அறிவுரை கூறியது.

அந்த மரத்தில் வசித்து வந்த மயில்கள் கொஞ்ச நாட்களாக கவலையில் இருந்தன. தங்களுக்குள் வருத்தப்பட்டு பேசிக் கொண்டன. இதை கவனித்த ஆண் காகமும் பெண் காகமும் மயில்களிடம் சென்று ஏன் கவலையாயிருக்கிறீர்கள் என்று கேட்டன. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவைத் தேடி ஓடுங்கள். நாளைய வரலாறு உங்கள் நிழலாகத் தேடி ஓடி வரும். ~ அம்பேத்கர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவர்களின் கலை ஆற்றலை வெளிப்படுத்த உதவுங்கள்

இது நவராத்திரி காலம். ஆய கலைகள் அறுபத்து நான்கிற்கும் அதிபதியாக இருக்கக் கூடிய சரஸ்வதித் தாயை வணங்கி எங்களின் கலை ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான காலம்.

உண்மை. மனித வாழ்வில் வீரம், செல்வம், கல்வி என்பவற்றின் அவசியத்தை உணர்ந்த நம் முன்னவர்கள் வீரத்துக்கு அதிபதியான துர்க்கையையும் செல்வத்துக்கு அதிபதியாகிய இலக்குமியையும் கல்விக்கு அதிபதியாகிய சரஸ்வதியையும் நவராத்திரி காலத்தில் வழிபட்டு வீரம், செல்வம், கல்வி ஆய பேற்றைப் பெற்றனர்.

இவ்வாறு முப்பெரும் தேவிகளின் அருட்கொடையாகக் கிடைத்த வீரத்தையும் செல்வத்தையும் கல்வியையும் தெய்வீகத்துடன் மற்றவர்களுக்கு வழங்க வேண்டும். அவற்றை எக் காலத்திலும் அநீதிக்கோ அதர்மத்துக்கோ பயன்படுத்தலாகாது என்ற தத்துவத்தை உணர்த்துவதாகவும் நவராத்திரி காலம் அமைகிறது.

தவிர, எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்பது கல்வியாகும்.

எனவே கல்வித் தெய்வம் சரஸ்வதித் தாயை எவரும் சமய பேதத்துடன் பார்த்துவிடக் கூடாது.

ஆம், எங்ஙனம் சூரியப் பொங்கல் தமிழர்களின் திருநாளோ அதேபோல நவராத்திரி என்பது வீரம், செல்வம், கல்வி ஆயவற்றை அருளுகின்ற அன்னை பராசக்தியை வழிபடுவதாகும்.

நவராத்திரி விரதத்தின் முழுமுதல் நோக்கம் மாணவர்களினது கலை ஆற்றலை வெளிப்படுத்துவதும் மாணவர்களின் கலைத்துவத்தை குருவின் ஆசியுடன் அரங்கேற்றுவதுமாகும்.

ஏனவே மாணவர்களிடம் இருக்கக்கூடிய கலைத்திறன்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பமும் வாய்ப்புமாக நவராத்திரி காலம் அமைகிறது.

பொதுவில் பாடசாலைகள் என்பன கல்வியை மட்டும் புகட்டுகின்ற இடங்கள் அல்ல.

மாறாக, மாணவர்களிடையே இருக்கக் கூடிய ஆற்றல்கள், ஆளுமைகள் என்பவற்றை இனங்கண்டு அவற்றை வெளிப்படுத்துவதற்குக் களம் அமைத்துக் கொடுப்பதும் பாடசாலைகளின் கடமையாகும்.

தவிர, நவராத்திரி விழாக்களில் மாணவர்கள் கூட்டாகச் சேர்ந்து பாடுவது, நடிப்பது, வில்லிசை இசைப்பது, குழு நடனம், சொற்பொழிவு என மாணவர்கள் தங்களின் ஆற்றலை வெளிப்படுத்துவர். இதற்கு அதிபர், ஆசிரியர்கள் களம் அமைத்துக் கொடுக்கும் பொருட்டே நவராத்திரி விழா இடம்பெறுகிறது.

அதேநேரம் மாணவர்கள் ஆய கலைகளை முறைப்படி கற்பதன் பொருட்டு விஜயதசமியில் கலைப்பயிற்சிகள் குருவின் மூலம் தொடக்கி வைக்கப்படுகின்றன.

**எனவே மாணவர்களின் கலை ஆற்றலை, கலைப்படைப்புகளை வெளிப்படுத்துவதற்காக அமையப்பெற்ற நவராத்திரி காலத்தை தக்க முறையில் பயன்படுத்த எங்கள் கல்வி நிர்வாகம் ஊக்கம் தர வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.**

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஐ.நா குழுவில் இலங்கை விவகாரம் குறித்து நாளை பரிசீலனை

## நீதியமைச்சர், உறவுகள் ஜெனிவா பயணம்

(கொழும்பு)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐ.நா. குழுவின் 29 ஆவது அமர்வில் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை நிலைமை தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இந்த அமர்வு எதிர்வரும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது.

இதன்போது இம்முறை அது மொண்டெனேகுரா, பெனின் மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நிலைமை தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்படவுள்ளது.

அந்தவகையில் இலங்கை தொடர்பான விவகாரம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை, பின்னர் பிற்பகல்3 மணிமுதல்மாலை 6 மணி வரை என மொத்தம் ஆறு மணி நேரம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையிலான உயர்மட்டப் பிரதிநிதிக் குழுவினர் நேற்றுப் புதன்கிழமை (24) ஜெனிவா பயணமாகினர்.

அதேவேளை வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவியும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா சென்றடைந்துள்ளார்.

இக்குழுவின் கூட்டத்தை முன்னிட்டு இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல் விவகாரம் கையாளப்படும்முறைமை, அதனுடன் தொடர்புடைய கட்டமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட தரப்பினரின் நிலைப்பாடு என்பன தொடர்பில் தெளிவுபடுத்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் என்பனவும் சிவில் சமூகத்தின் சார்பில் கொள்கை ஆய்வுக்கான அடையாளம் நிலையம், சர்வதேச மன்னிப்புச்சபை, தமிழ் உலகம் அமைப்பு, கிழக்கு சமூக அபிவிருத்தி அமையம், இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு உள்ளிட்ட அமைப்புக்களும் தமது அறிக்கைகளை இக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# தங்காலையில் மீட்கப்பட்ட போதைப்பொருட்கள் கடல்மார்க்கமாகவே நாட்டுக்கு எடுத்துவரப்பட்டன

## பொலிஸார் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

தங்காலை - சீனிமோதரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் மூன்று கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 988 கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் மற்றும் ஹெரோயின் உள்ளிட்ட 705 கிலோகிராம் போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவை கடல் மார்க்கமாகவே நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் பிரகாரம் குறித்த போதைப்பொருட்கள் கடந்த 21 ஆம் திகதி இரண்டு கப்பல்களில் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் குறித்த போதைப்பொருட்கள் குடவெல்ல, மாவெல்ல கடற்கரையில் தரையிறக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த போதைப்பொருள் அங்கிருந்து கடற்கரைக்கு அருகிலுள்ள வீடொன்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டு கொள்கலன் மூலம் சீனிமோதர மற்றும் கொடெல்லவெலப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த போதைப் பொருள் மீட்பு சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் துரிதப்படுத்தியுள்ள நிலையில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# முன்னாள் கடற்படைத் தளபதியின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 08 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை (24) உத்தரவிட்டுள்ளது.

கடற்படைத் தளபதியாக நிஷாந்த உலுகேதென்ன கடமையாற்றிய காலத்தில் குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞன் ஒருவன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில் நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மார்பகப் புற்றுநோய் தீவிரம் எச்சரிக்கிறது சுகாதாரத்துறை

இலங்கையில் மார்பகப்புற்றுநோய் தீவிரம் அடைந்து வருவதாக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டப்பணிப்பாளர் மருத்துவர்ஞனி அழகப்பெரும தெரிவித்ததாவது,

நாட்டில் தினமும் புதிதாக 15 மார்பகப் புற்றுநோய் நோயாளிகள் பதி[illegible] மூன்று பேர் இந்நோயால் உயிரிழக்கின்றனர்.

மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் குணப்படுத்த முடியும் என்றாலும் 30% நோயாளிகள் தாமதமாகக் கண்டறியப்படுவதால் குணப்படுத்துவது கடினமாகவுள்ளது.

மேலும் இலங்கையில் ஆண்டுதோறும் 15 ஆயிரத்து 245 பேர் புற்றுநோயால் உயிரிழப்பதாகவும் இதில் 798 பேர் மார்பகப் புற்றுநோயால் உயிரிழப்பதாகவும் அவர் [illegible] (ம-7)

# அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமானம் இடித்தழிப்பு

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினர் தொடர்ச்சியாக சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பாக தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகளினை எடுத்து வருகின்ற நிலையில் மாலிசந்திப் பகுதியில்முன் அனுமதி பெறப்படாமல் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டுமானம் நேற்று வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் தவிசாளரின் அறிவுறுத்தலின் பேரில் செயலாளரின் நேரடிக் கண்காணிப்பில் இடிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிரதேச சபை அமர்வில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் பல சட்டவிரோத கட்டுமானங்கள் அகற்றுவதற்கான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

09

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1889 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்று வரை புதிய மாகாணங்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை.

மாகாண நிர்வாக முறைமை 1833 இலிருந்து 1955 வரை தொடர்ந்திருந்தது. 1955இன் 22ஆம் இலக்க நிர்வாக மாவட்டச் சட்டத்தின் மூலம் மாகாண நிர்வாக முறைமை மாவட்டங்களுக்கு கையளிக்கப்பட்டது.

#### புது அரசாங்கத் திணைக்களங்கள் உருவாதல்

நாட்டின் சனத்தொகை பெருகியதனாலும், பொருளாதார முயற்சிகள் விரிவடைந்ததினாலும் நிர்வாகக் கருமங்கள் அதிகரித்தன. இவற்றை ஈடு செய்யும் பொருட்டு, தேவைக்கேற்ப காலத்துக்குக் காலம் புதுத் திணைக்களங்கள் நிறுவப்பட்டன.

கல்வி, சுகாதாரம், பொது மராமத்து வேலைகள் எனும் திணைக்களங்கள் நீண்ட வரலாற்றை உடையவை. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய நாட்தொட்டு இவை இயங்கிவர ஆரம்பித்தன. தெருக்கள், புகையிரத வீதிகளின் விரிவுடன் புகையிரத, தந்தி திணைக்களங்கள் நிறுவப்பட்டன.

விவசாயத்தினதும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினதும் முன்னேற்றத்துடன் விவசாயம், பூந்தோட்டம் (Royal Botanic Gardens), நில அளவை, நீர்ப்பாசனம், குடியேற்றம், வனபரிபாலனம் சம்பந்தமான திணைக்களங்கள் தனிக் கிளைகளாக இயங்கத் தலைப்பட்டன.

1870 இற்குப் பின்னர் இத்திணைக்களங்களின் எண்ணிக்கையும் திறமையும் அதிகரித்தன. அதற்குமுன் நிலவிய நிர்வாக முறையில் நாட்டின் பல்வேறு பாகங்களில் அரசாங்க முகவர்கள் தான் பிரதான நிர்வாக அதிகாரிகளாக விளங்கினர். அவர்கள் தத்தம் மாகாணங்களில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டல், அரசிறைகளைச் சேகரித்தல், விவசாய நீர்ப்பாசன வேலைகளைப் பராமரித்தல், பொது மராமத்து வேலைகளை மேற்பார்வை செய்தல், உள்ளூராட்சி மன்றங்களைக் கண்காணித்தல், எனும் கடமைகளுடன் வேறு பல சேவைகளையும் புரிந்தனர்.

நாளடைவில் நிர்வாகக் கருமங்கள் பெருகவே, அவை சிக்கல்கள் நிறைந்தனவாக மாறின. பல்கலைக்கழகக் கலைத்துறைப் பட்டதாரிகளான முகவர்கள் நீர்ப்பாசனம், விவசாயம் பொது மராமத்து வேலைகள் போன்ற துறைகளை நிர்வகிப்பதற்குத் தேவைப்பட்ட தொழில்நுட்ப அறிவு இல்லாதிருந்தனர்.

விஞ்ஞான அறிவும், பொறியியல் திறமையும் உள்ள நிபுணர்கள் இவ்விதமான வேலைகளுக்கு நியமிக்கப்பட வேண்டுமென்பதை அரசாங்கம் படிப்படியாக உணர்ந்தது. ஆகவே, 1870 இற்குப் பின்னர், பல திணைக்களங்கள் நிறுவப்பட்டு, தொழில்நுட்ப வேலைகளைப் பொறுப்பேற்றன. அரசாங்க முகவர்கள், பொது நிர்வாகத்தையும் மாகாணங்களில் பல திணைக்களங்களின் வேலைகளையும் தொடர்புபடுத்தும் வேலையை மேற்கொண்டனர்.

இவ்விதமாக, இக்காலத்தில் விருத்தியடைந்த திணைக்களங்களுள் அதி முக்கியத்துவம் வாய்ந்தவை விவசாயம், கல்வி, வைத்தியம், உள்ளூராட்சி என்பனவாம்.

#### 1865இற்கு பின் இலங்கையின் கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றம்

இலங்கையின் கல்வி முறையினைப் பரிசீலனை செய்வதற்கென 1865 இல் சட்டசபை, றிச்சட் மோகன் என்பவரின் தலைமையில் ஒரு விசாரணைச் சபையினை நியமித்தது. அக்குழுவின் சிபார்சுகளின் பேரில் பல முக்கியமான மாற்றங்கள் செய்யப்பட்டன. இச்சபை சிபார்சு செய்த திருத்தங்களுள் முக்கியமானவை பின்வருவன:

1. பாடசாலை மத்தி சபையினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பொதுக் கல்வித் திணைக்களத்தை (Department of Public Instruction) அரசாங்கம் தன் பொறுப்பில் அமைத்தல் வேண்டும். இத்திணைக்களத்திற்கு இயக்குநர் ஒருவர் (Director) தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

2. ஆரம்பப் பாடசாலைகளில் போதன மொழி, தாய் மொழியாக இருத்தல் வேண்டும்.

3. உயர்தர கல்விக்கு ஒரு கல்லூரி நிறுவப்படல் வேண்டும். தகுதியுடைய மாணவர் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று உயர் கல்வியைப் பெறுவதற்கு அவர்களுக்கு நன்கொடைப் பண உதவிகளை நல்கும் முறை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

4. சுயமொழிப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தல் வேண்டும். அப்பாடசாலை ஆசிரியர்களின் பயிற்சிக்காக ஓர் ஆசிரிய பயிற்சிக் கழகம் நிறுவப்படல் வேண்டும்.

இவ்விசாரணைச்சபை செய்த சிபார்சுகளின் அடிப்படையில் சேர். ஹேக்கியூலிஸ் றொபின்சன் 1869 இல் மிஷன் சபைகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த மத்திய பாடசாலைச் சபையைக் கலைத்து, அதற்குப்பதிலாக இயக்குநர் ஒருவரின் கீழ் பொதுக் கல்வித் திணைக்களத்தை நிறுவினார்.

1870 இல் சிங்களம், தமிழ் எனும் தாய் மொழிகள் மூலம் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றது. இக்காலந்தொட்டு அரசாங்க வருமானம் அதிகரிக்கவே ஆங்கில சுய மொழிப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 1869இல் 64 ஆக அரசினர் பாடசாலைகள் 1872 இல் 200 ஆகவும் 1882இல் 421 ஆகவும் 1890இல் 436 ஆகவும் அதிகரித்தது. 1869இல் 21 ஆக உதவி பெறும் பாடசாலைகள் 1872 இல் 402 ஆகவும் 1882இல் 832 ஆகவும் 1890இல் 984 ஆகவும் அதிகரித்தது.

1872இல் அரசினர் பாடசாலைகளில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 10,852 ஆகும். இவ்வெண்ணிக்கை 1890இல் 40,290 ஆக அதிகரித்தது. 1872 இல் உதவி பெறும் பாடசாலைகளில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 25,443 ஆகும். இவ்வெண்ணிக்கை 1890இல் 73,698 ஆக அதிகரித்தது. பொதுவாகக் கூறின் 1872 இற்கும் 1890 இற்கும் இடையில் பாடசாலைகளின் எண்ணிக்கை இரு மடங்காகவும், அவற்றில் கல்வி பயின்ற மாணவர்களின் தொகை மும் மடங்காகவும் பெருகின.

1885 தொடக்கம், அரசாங்கமானது சுய மொழிப் பாடசாலைகளின் விருத்தியில் மேலும் கூடுதலான அக்கறையும் சிரத்தையும் காட்டலாயிற்று. ஆங்கிலக் கல்வி, நன்கொடை பெறும் பாடசாலைகளின் பொறுப்பில் பூரணமாக விடப்பட்டது. அரசாங்கம் உள்ளூர்ப் பகுதிகளிலும், கிராமப் புறங்களிலும் விசேடமாக வட மத்திய, வட மேல் மாகாணங்களில் சுய மொழிப் பாடசாலைகளைத் திறக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டது. கடற்கரையோர பிரதேசங்களில் கிறிஸ்தவ மிஷன்கள் மேலும் மேலும் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவின. ஆங்கிலக் கல்வியில் இலங்கை பெரும்பாலும் இங்கிலாந்தின் முறைகளைத்தான் பின்பற்றியது.

உயர் கல்வியைப் பொறுத்தமட்டில், 1880 இல் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட தராதரப் பரீட்சைகள் இங்கு முதன் முதல் நடாத்தப்பட்டன. 1873 இல் சட்டக் கல்விக் கழகம் (Council of Legal Education) ஸ்தாபிக்கப்பட்டதுடன் சட்டக் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை சட்டக் கல்லூரி (Sri Lanka Law College) 1874 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டக் கல்வித் தேவைப்பாடுகளுக்காக இலங்கை சட்டத்தரணி மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்டது.

வைத்தியக் கல்லூரி 1870 இல் ஆரம்பமாயிற்று. இக்கல்லூரி வழங்கிய பட்டம் (L. M. S., Ceylon) இப்பட்டம் பிரித்தானிய வைத்திய கழகத்தினால் (British Medical Association) அங்கீகரிக்கப்பட்டது. 1893 இல் அரசாங்கம் தொழில்நுட்பக் கல்லூரியையும் (Technical College) நிறுவியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

யும், பாதுகாக்க போராட்டங்களை தொடர்வது எமது உரிமை என்றும் சில தினங்களில் மாவட்டம் தழுவிய ரீதியில் பாரிய போராட்டம் வெடிக்கும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் எச்சரித்துள்ளார்.

மன்னார் போராட்டக்களத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மன்னார் காற்றாலை தொடர்பாக எதை வைத்து குறித்த அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று எமக்குத் தெரியவில்லை. பலமுறை குறித்த திட்டம் குறித்து அதிகாரிகளுடனும் அமைச்சர்களுடனும் ஜனாதிபதியுடனும் தொடர்பு கொண்டு மக்களுடைய கருத்துக்களையும், எங்களுடைய கருத்துக்களையும் முன் வைத்தோம்.

எனினும் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல், தான்தோன்றித்தனமாகத் தனது சுய முடிவை எடுத்துள்ளமை மன வேதனையை நம்பியிருந்த எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

வாழ்வது எமது உரிமை.அதை யாரும் பறிக்க முடியாது.அந்த உரிமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். எமது போராட்டம் விரிவடைகிறது என்பதை உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். எமது மூன்று கோரிக்கைகள் நிறைவேறும்வரை எமது போராட்டம் தொடரும். மாவட்ட ரீதியில் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டமாக மாறவுள்ளது என்றார். (ம-7)

## கட்டுநாயக்க...

டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாட்டை விட்டு தப்பியோட முயன்ற நிலையில் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கைக்குண்டு ஒன்றும் வாள் ஒன்றினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்நிலையில் அவரை நேற்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில் முற்படுத்திய பொலிஸார், அவரை இரண்டு நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி கோரியிருந்தனர். பொலிஸாரின் கோரிக்கைக்கு நீதிமன்றமும் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## மகிந்தவை...

தங்காலை கார்ல்ட்டனில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரின் மனைவி தனுஜா ஜாவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அரசியல் மற்றும் தனிப்பட்ட கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு மிகவும் அன்பான சந்திப்பை மேற்கொண்டதாக மகிந்த தனது முகநூல் பதிவில் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள மகிந்த,

“சிங்கள பாரம்பரியத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட மதிய உணவை அனுபவித்த குழுவுக்கு தமது நட்பை நான் அன்புடன் நினைவு கூருகிறேன்.

நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவு இராஜதந்திர உறவுகளுக்கு அப்பாற்பட்டது.

இது வரலாற்று, மத, கலாசார, பொருளாதார மற்றும் பாதுகாப்புப் போன்ற பல அம்சங்களைக் கொண்டுள்ளது. தற்போதைய இந்திய உயர்ஸ்தானிகரின் அன்பும் வரலாற்று அறிவும் வரலாற்று உறவுகளின் அடிப்படையில் நமது இரு நாடுகளுக்கும் இடையே தற்போதுள்ள ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு ஒரு தனித்துவமான பங்களிப்பை வழங்கும் என்று நான் நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜெனிவா...

வதற்காக நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவிற்குப் பயணமானார்.

நாளை இந்த மீளாய்வுக் கூட்டம் இடம்பெறவுள்ளதுடன், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7)

## மன்...

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு ஆவணம், வட்சப் செயலி ஊடாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் பிரதிகளைத் தாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ ஆவணம் கிடைத்த பின்னர் அதன் விபரங்களைத் தாம் பகிரங்கப்படுத்த முடியும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதன்படி ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 36 காற்றாடிகளுக்கு மேலதிகமாக ஆரம்பிக்கப்பட்ட இரண்டு திட்டங்களுக்கான 14 காற்றாடிகளை அமைக்கும் பணிகளை முன்னெடுத்துச் செல்லுமாறு ஜனாதிபதியின் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தக் காற்றாலை நிறுவல் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் தொடர்ந்தும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய, கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னாலும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டங்களின் பின்னர் நிலைமையை அறிந்து பரிந்துரைக்கும் வகையில் நிபுணர் குழுவொன்றை ஜனாதிபதி அமைத்திருந்தார்.

அந்தக் குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலேயே, ஜனாதிபதியின் பணிப்புரையும் வெளியாகியுள்ளது.

அதேநேரம் இந்தப் பணிப்புரைக்கு மேலதிகமாக நிபுணர் குழு பரிந்துரைத்துள்ள சுற்றாடல் சம்பந்தமான தடுப்பு நடவடிக்கைகளையும் உரிய முறையில் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிஜிட்டல் மயமாக்கல்

# கல்வித் துறையில் ஓரளவு மாற்றத்தை ஏற்படுத்தும்

## பிரதமர் ஹரிணி

கல்வி சீர்திருத்தங்களை மேற்கொள்ள டிஜிட்டல் பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் டிஜிட்டல் மயமாக்கல் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்விக்கான டிஜிட்டல் பணிக்குழுவின் காலாண்டு முன்னேற்ற மதிப்பாய்வு விவாதத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் உரையாற்றிய பிரதமர், பின்வருமாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

டிஜிட்டல் கல்வி, கல்வி சீர்திருத்தங்களுடன் இணைந்து செயற்படும் ஒரு முக்கிய செயல்முறையாகும். இந்தச் சீர்திருத்தங்களை வழிநடத்துவத்ற்கும், தேவையான கொள்கைகளை வகுப்பதற்கும் மூன்று ஆண்டுகளுக்கு டிஜிட்டல் பணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் கல்வியின் அடித்தளத்தை உருவாக்கி குழந்தைகளுக்கு வழங்கும்போது, அவர்கள் அந்தப் பாதையில் முன்னேறுவார்கள். எனவே டிஜிட்டல் கல்விக்கான கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் தேவையான நடவடிக்கைகளைத் தயாரிப்பது மிகவும் அவசியம். இந்த முயற்சியில் உங்கள் பங்களிப்பை நாங்கள் பாராட்டுகிறோம் என்றார். (ம-7)

# மன்னார் காற்றாலைத் திட்டம் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## சபையில் செல்வம் அடைக்கலநாதன்

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் மக்களின் கோரிக்கைகளை கருத்தில் கொள்ளாமல் அந்தத் திட்டம் தொடர்பான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி அறிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் திட்டம் நிறுத்தப்படாவிட்டால் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தியாகம் செய்யவும் தயங்கமாட்டார்கள் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (24) நடைபெற்ற தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

மன்னாரின் காற்றாலை மின்சாரம் தொடர்பில் மன்னாரிலும் கொழும்பிலும் தொடர்ச்சியாக மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். ஆனால் ஜனாதிபதி தனது கடிதத்தில் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உபகரண செயற்பாடுகளை முன்னெடுக்க ஆணையை வழங்கியுள்ளார்.

உண்மையில் மன்னார் மக்களின் போராட்டம் பொய்த்திருக்கின்றதா? அந்த மக்களின் வாழ்வு உரிமை மறுக்கப்பட்டுள்ளதா? மன்னார் மக்களின் வாழ்வுரிமை பொய்யாக்கப்பட்டுள்ளதா? என்பதை இந்தச் சபையில் கேள்வியெழுப்பிகின்றேன்.

போராட்ட இயக்கமொன்றின் பின்னணியை கொண்டுள்ள ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பை எடுத்துள்ளார். அவர் எங்கள் மக்கள் வாழ முடியாது என்று கூறும் சூழலை உருவாக்கும் காற்றாலை மின்சார திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறுவது எங்களின் மக்களின் உயிரை துச்சமாக மதிக்கும் செயற்பாடாகவே இருக்கும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ம-7)


**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியில் உள்ள
Supermarket ஒன்றிற்கு
- முகாமையாளர்
- சாரதி (AD)
- பணியாளர்கள்
- விற்பனையாளர்
- கணக்காளர்
- சிட்டையிடுபவர்

உடனடியாகத் தேவை
ஆண்/பெண் இருபாலாரும்
(5512)
**077 221 0294**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3950)
**076 825 7716** (ஆகாஸ்)

**TECHNO WORLD**
A/L தொழில்நுட்பப் பிரிவு
10 வது வருடத்தில் தடம் பதிக்கின்றது
A/L 2025 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும்
அனைத்து மாணவர்களுக்குரிய
**விசேட செயலமர்வு**

27,28,29 September 2025 → தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30 Sep. 01,02 Oct. 2025 → பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
03,04,05 October 2025 → ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்

"காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை"
வெலிங்டன் சந்தி,
(லிங்கன் கூல்பார் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : **077 017 5346**
(C-3948)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

கொடிகாமத்தில் 5 பேர் கொண்ட குடும்பமொன்றிற்கு வீட்டுவேலை செய்வதற்கு பெண் வேலையாளர் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம்
சம்பளம் 60,000/=
(5501)
**076 344 3908**
**076 928 6541**

**வேலையாட்கள் தேவை**

கொடிகாமம், சாவகச்சேரி பகுதிகளில்
இயங்கி வரும் அச்சகம் ஒன்றிற்கு தொழில்
தெரிந்தவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள்
ஆண், பெண் தேவை.
**076 931 8695**
**077 977 3165**
(C-3952)

**ஆட்கள் தேவை**

தெல்லிப்பளையில் உள்ள
சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு
விற்பனையாளர்கள் தேவை.
தொடர்புக்கு :
**076 778 5120**
**077 398 5120**
(5504)

**வேலையாட்கள் தேவை**

அலுவலக வேலைக்கு பெண் பணியாளர்
(18-30 வயது) தேவை. லொத்தர் ரிக்கெட் விற்பனை
செய்ய விற்பனை உதவியாளர் தேவை. யாழ்.
நகரில் இருந்து 5 Km உட்பட்டிருத்தல் வேண்டும்.
தொடர்புகளுக்கு :
**077 122 8841 / 076 185 2241**
(5502)

**உடனடி வேலைவாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
(ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- முதல் 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-3951)
**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236
v2vacancies@gmail.com

**கனடா - வரி இல்லாமல்**
**விரைவு பொதிகள் சேவை**

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை - நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3951)
UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

**உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவை**
16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
- UK - 1250/=
- Australia - 2050/=
- France - 1930/=
- Canada - 2470/=
- Germany - 1930/=

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மல்லாவி
(5511)

**Travels and Tours**
Canada, UK, France, Australia, Korea, Newzealand, Romania மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள் செய்து தரப்படும்.
- Air Ticketing
- Travel Insurance
- Police Clearance
- Vfs appointment செய்து கொள்ளலாம்

**077 413 4528**
யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், வவுனியா
(5510)

**வீடு விற்பனைக்கு**

பூஜை அறை உள்ளடங்கலாக 5 அறை கொண்ட வீடு
(1 பரப்பு 13.63 குழி) இலந்தைக்குளம் வீதி, மாம்பழம்
சந்தியில் இருந்து 800 m தூரத்தில் விற்பனைக்கு
உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு எண் : **077 369 9603**
(1584)

**காணி, வீடு விற்பனைக்கு**

சித்தன்கேணியில் இல : 14, முதலியார் குமாரசுவாமி
வள்ளியம்மை வீதியில் 2 ¾
பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்கு உள்ளது.
தரகர்கள் தலையீடு இன்றி விலை தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு : **077 618 0644**
(5506)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.